C.C.// 66/2024

PW – 15

பெயர்: ஸ்தேவான் சேகர்

தேதி: 26.11.2024

<u>முதல் விசாரணைத்தொடர்ச்சி</u>

TN69U8725 என்ற இருசக்கர வாகனத்தின் புகைப்படம் அசாபொ.4 CD அசாபொ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் சொல்லும் மேற்படி பதிவு எண் முதல் தகவல் அறிக்கையிலேயோ சாட்சி முத்துராமன், விமல் விசாரணை வாக்குமூலத்திலோ துலங்காது என்றால் சரிதான். மேற்படி வாகனத்தின் உரிமையாளர் யார் என்பது குறித்தும் பதிவு எண் சரியானதுதானா என்பது குறித்தும் மோட்டார் வாகன அலுவலகத்தில் விசாரித்து அறிக்கை எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். இறுதி அறிக்கையின் 10–வது காலத்தில் 1வது வரிசை எண்ணில் மேற்படி எண்ணுள்ள இருசக்கர வாகனம் சுந்தரபாண்டியன் என்பவரிடம் இருந்து கைப்பற்றப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 1வது வரிசை எண்ணில் எங்கு இருந்து மீட்கப்பட்டது என்பதில் சின்ன பத்திரகாளியம்மன் கோவில் தெரு கீழ் கடையம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது அவரின் முகவரி இறுதிஅறிக்கையில் காலம் 11–ல் வரிசை எண் 2ல் சண்முகவேல் என்பவர் கைது ஆன நாள் என்ற இடத்தில் 08.10.2016 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் நிலையம் ஆஜரான தேதி 08.10.2016. நான் புலன்விசாரணை செய்த போது காயம் பட்டதாக சொல்லும் விமல், முத்துராமன் ஆகியோர்களை எதிரிகள் அசிங்கமாக பேசியதால் அவமானம் ஏற்பட்டதாக முதல் தகவல் அறிக்கையிலோ அல்லது விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளார்களா என்றால் ஆமாம். எதிரிகள் மிரட்டியதால் சாட்சிகள் விமல்மற்றும் முத்துராமனுக்கு உயிர் பயம் ஏற்பட்டதாக முதல் தகவல் அறிக்கையிலோ அல்லது விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளார்களா என்றால் ஆமாம். சாட்சி விமல் மின்வாரியத்தில் வேலைசெய்த காரணத்தினாலும் சாட்சி முத்து ராமன் காவல் துறையில் வேலைசெய்த காரணத்தினாலும் அவர்களுடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு

மோசடியாக எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து அதன் அடிப்படையில் புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல்செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் நேரத்தில் இந்த வழக்கை மேல் விசாரணைக்கு எடுக்கவில்லை என்றாலும் சொத்துக்களை அத்தாட்சியில் கைப்பற்றியது இல்லை என்றாலும் சரியல்ல.

2 முதல் 4 எதிரிகள் தரப்பில் மேற்கண்ட குறுக்குவிசாரணை ஏற்றுக்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi